19

J2

## சுருக்கம்

மறுவாழ்வு – முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள்–தமிழக மக்களுக்கு வழுங்கப்படும் நலத்திட்டங்களை முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுபடுத்துதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொது (மறுவாழ்வு.2)த் துறை

அரசு ஆணை (நிலை) எண்.480 நாள்: 07-06-2011

படிக்கப்பட்டது:

Principal Secretary to Govt.
09 JUN 2011
Chennai 9

1) அரசு ஆணை (நிலை) எண்.18, சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டம் (SW3) துறை, நாள் 21.10.2010
2) அரசு ஆணை எண்.42, சமூக நலம் மற்றும் சத்துணவு (SW3) துறை, நாள் 17.05.2011 மற்றும் அரசு ஆணை எண்.43, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம் (SW3) துறை, நாள் 17.05.2011
3) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 30.05.2011 அன்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் முடிவு.
4) 3.06.2011 அன்று சட்டப்பேரவையில் நிகழ்ந்த ஆளுநர் உரை.

*****

Para 9
9/6/2011

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 30.05.2011 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தமிழ்நாட்டில் உள்ள முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள் நலனுக்காக பல்வேறு சிறப்பு நலத்திட்டங்கள் விரிவாக்கம் செய்வது குறித்து முடிவெடுக்கப்பட்டது. 3.06.2011 அன்று சட்டப்பேரவையில் நிகழ்ந்த ஆளுநர் உரையில் **“இலங்கைத் தமிழர்கள் தங்கியுள்ள முகாம்கள் சீரமைக்கப்பட்டு அவர்கள் தமிழகத்திலேயே கௌரவமாக வாழத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். இந்த முகாம்களில் தரமான இருப்பிடம், குடிநீர், சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் போன்றவை செய்து தரப்படும். இலங்கை தமிழ் அகதிகளின் குழந்தைகள் கல்வி பயிலத் தேவையான உதவிகளை வழங்குவதுடன் அவர்கள் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கான சிறப்பு வேலை வாய்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்படும். தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் அனைத்து நலத் திட்டங்களும் முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டிக்கப்படும்”** என அறிவிக்கப்பட்டது.

2. அதன்படி விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள நலத் திட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

3. ஆதரவற்ற முதியோர் ஒய்வூதிய திட்டம், ஆதரவற்ற விதவைபர் ஒய்வூதிய திட்டம், கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் ஒய்வூதியத் திட்டம், ஆதரவற்ற மாற்றுத் திறனுடையோர் ஒய்வூதியத் திட்டம் மற்றும் ஆதரவற்ற திருமணமாகாத பெண்கள்

ஓய்வூதிய திட்டம் முதலான இலவச சமூக பாதுகாப்பு திட்டங்களின் கீழ் ரூ.1000/- ஓய்வூதியம் தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இலங்கை தமிழர் முகாம்களில் தமிழ்நாட்டில் 65 வயதிற்கு மேற்பட்ட முதியோர் 2580 நபர்களும், விதவையர் 2518 பேரும், ஆதரவற்ற பெண்கள் 182 பேரும் மாற்றுத் திறனாளிகள் 264 பேரும் வசித்து வருகின்றனர். இத்திட்டத்தை முகாம் வாழ் இலங்கை தமிழர்களுக்கும் விரிவுபடுத்தலாம்.

4. பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஆண் குழந்தை இன்றி ஆனால் இரண்டு பெண் குழந்தைகளுக்கு மேல் இல்லாத குடும்பங்களுக்கு இந்தத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி ஒரு பெண் குழந்தை மட்டுமே உள்ள குடும்பத்திற்கு குழந்தையின் பெயரில் ரூ.22,200/- வைப்பீடு செய்யவும் இரண்டு பெண் குழந்தைகள் உள்ள குடும்பத்தில், ஒவ்வொரு குழந்தையின் பெயரிலும் ரூ.15,200/- வைப்பீடு செய்யப்பட்டு வருகிறது. இவ்வைப்புத் தொகை 20 வருடங்களுக்கு நிதி நிறுவனங்களில் வைக்கப்படுவதுடன், 5 வருடங்கள் முடிவடைந்த பின்பு குழந்தைகளுக்கு மாதம் ரூ.150/- வீதம் 20-ஆவது வருடம் வரை கல்வி சம்பந்தப்பட்ட செலவிற்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினை முகாம் வாழ் இலங்கை தமிழர்களுக்கு விரிவுபடுத்தலாம்.

5. முகாம்வாழ் இலங்கை தமிழ் பெண்களில் தையல் பயிற்சி பெற்றுள்ள 3778 பேருக்கு தையல் இயந்திரம் வழங்குதல் திட்டத்தின் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு சமூக நலத்துறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்ற திட்டத்தை விரிவுபடுத்தி இலவசமாக தையல் இயந்திரம் வழங்கலாம். அதற்காக ஆகும் செலவு ரூ.1.13/– கோடியாகும்.

6. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவி திட்டத்தின் கீழ் தற்போது முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களில் தகுதி வாய்ந்த பெண்களுக்கு ரூ.20,000/- திருமண உதவி ஏற்கனவே வழங்கப்படுகிறது. பார்வை 1ல் காணும் அரசாணையின்படி இத்திட்டத்திற்கு ரூ.2.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது பார்வை இரண்டில் காணும் அரசாணைகளின்படி தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் திருமண உதவியை கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

அ) பட்டயம் / பட்டம் பெற்ற பெண்களுக்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.50,000/- ரொக்கமும், 4 கிராம் திருமாங்கல்யத்திற்கான தங்கம் வழங்கப்படுகிறது.

ஆ) இதர பெண்களுக்கு ரூ.25,000/- ரொக்கம் மற்றும் 4 கிராம் திருமாங்கல்யத்திற்கான தங்கம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தினை தமிழ் நாட்டிலுள்ள முகாம்களில் வாழும் தகுதியான இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுபடுத்தலாம்.

7. தமிழ்நாட்டில் அரிசி பெற தகுதியுள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அலகுகளுக்கேற்ப 12 கிலோ முதல் 20 கிலோ வரையில் இலவசமாக அரிசி வழங்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே, இலங்கை தமிழர்களில் வயது வந்த தனி நபர்களுக்கு ஒரு நாளைக்கு தலா 400 கிராம் வீதம் மற்றும் 8 வயதுக்கு கீழுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு நாளைக்கு 200 கிராம் வீதம் மானிய விலையில் மத்திய அரசின் மானிய திட்டத்தின் கீழ் அரிசி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வயது வந்த தனிநபர் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றிற்கு 12 கிலோ அரிசி வீதமும் 8 வயதிற்குட்பட்ட ஒவ்வொரு குழந்தைக்கும் மாதம் ஒன்றிற்கு 6 கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது. இந்த அளவீட்டின்படி பார்த்தால் ஒரு நபர் குடும்பமாய் இருப்பின் (single member family) ஒரு மாதத்திற்கு வழங்கப்படும் அரிசியின் அளவு 12 கிலோ. பெரியவர் ஒருவர் மற்றும் 8 வயதிற்குட்பட்ட ஒரு குழந்தையும் இருப்பார்களாயின் அந்த குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்கு 18 கிலோ அரிசி வழங்கப்படுகிறது. ஒரு பெரியவர் மற்றும் இரண்டு குழந்தைகள் இருப்பார்களாயின் அந்த குடும்பத்திற்கு வழங்கப்படும் அரிசியின் அளவு 24 கிலோ ஆகும். இதுபோல குடும்பத்தில் உள்ள பெரியவர் மற்றும் குழந்தைகளின் எண்ணிக்கையை பொறுத்து அரிசி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு கிலோ அரிசி 57 பைசா வீதம் மானிய விலையில் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. 20 கிலோ அரிசி வரை இலவசமாக வழங்கும் திட்டத்தை முகாம் வாழ் தமிழர்களுக்கு விரிவுபடுத்தி, தற்போது இம்மக்களுக்கு வழங்கப்படும் ஒவ்வொரு கிலோ அரிசிக்கும் செய்கின்ற செலவினமான 57 பைசாவை மாநில அரசே ஏற்க முடிவுசெய்துள்ளது. இதன்படி 20 கிலோ அரிசி வரை அனைத்து குடும்பங்களுக்கும் இலவசமாக வழங்குவதன் மூலம், அரசுக்கு ஆண்டொன்றிற்கு ரூ.25.53 இலட்சம் செலவினம் ஏற்படும்.

8. தமிழக மக்களுக்கு வழங்குவதைப் போன்று முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்கப்படுகிறது. ஆனால், இதர முக்கிய மளிகை பொருட்களான கோதுமை மாவு, பாமாயில், பருப்பு வகைகள் மற்றும் ரவை ஆகியவை வழங்கப்படுவதில்லை. எனவே மானிய விலையில் கோதுமைமாவு, பாமாயில், பருப்பு வகைகள் முகாம் வாழ் இலங்கை தமிழ் மக்களுக்கு விரிவுபடுத்தலாம். இதற்காக ஆகும் வருடாந்திர செலவு ரூ.5.8 கோடியாகும்.

9. தமிழகத்திலுள்ள பட்டதாரிகளில்லா குடும்பங்களில் ஒற்றை சாளர முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு தொழிற் கல்லூரிகளில் பயிலும் பட்டதாரி மாணவர்களுக்கு கல்வி கட்டண சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களும் உயர்கல்வி வாய்ப்புகளை பெறும் பொருட்டு, முகாம்களில் வசிக்கும் இலங்கை அகதிகள் குடும்பங்களைச் சேர்ந்த தகுதியான மாணவர்களும் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தினை விரிவுபடுத்தலாம்.

10. பத்தி 3 முதல் 9 வரை விவரிக்கப்பட்ட அரசு முடிவுகளின்படி கீழ்க்கண்ட நலத்திட்டங்களை தமிழ்நாட்டிலுள்ள மக்களுக்கு வழங்கப்படுவதுபோல் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுபடுத்த அரசு ஆணையிடுகிறது. அடியிற் குறிப்பிட்டுள்ள துறைகள், இத்திட்டங்களை நடைமுறைபடுத்தும் பொறுப்பேற்று, துறைத் தலைவர்கள் வழியாக முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு இத்திட்டங்களை உடனடியாக நிறைவேற்றிட ஆவண செய்ய வேண்டும்.

| வரிசை எண். | பொதுநலத் திட்டங்கள் | செயல்படுத்த வேண்டிய துறை |
|---|---|---|
| 1 | (1) சமூக நலத்திட்டம்<br>(2) பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம்<br>(3) தையல் இயந்திரம் வழங்கும்திட்டம்<br>(4)மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவி திட்டத்திற்கான நிதியை உயர்த்தி வழங்குதல் | சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை |
| 2 | 20 கிலோ வரை இலவச அரிசி வழங்குதல்<br>அத்தியாவசியப் பொருட்களான கோதுமை மாவு, பாமாயில், பருப்பு வகைகள் மற்றும் ரவை ஆகியவை வழங்குதல் | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை |
| 3 | தமிழகத்திலுள்ள பட்டதாரிகளில்லா குடும்பங்களில் ஒற்றை சாளர முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு தொழிற் கல்லூரிகளில் பயிலும் பட்டதாரி மாணவர்களுக்கு கல்வி கட்டண சலுகை அளிக்கப்பட்டு வருவதுபோல் முகாம்களில் வசிக்கும் இலங்கை அகதிகள் குடும்பங்களைச் சேர்ந்த தகுதியான மாணவர்களும் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தினை விரிவுபடுத்தி வழங்குதல் | உயர்கல்வித் துறை |

11. மேலே பத்தி 10ல் குறிப்பிடப்பட்டுள்ள நலத்திட்டங்களை முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு விரிவாக்கம் செய்வதற்கான செலவினங்களை அந்தந்த துறையின் கணக்குத் தலைப்பின் கீழ் செலவிட ஏதுவாக தக்க நிதி ஒதுக்கீடு உடனடியாக செய்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது. முகாம்களில் வாழும்

இலங்கைத் தமிழர்களுக்கு நலத்திட்டங்களை வழங்குவதற்கான புள்ளி விவரங்களை அந்தந்த மாவட்ட ஆட்சியர்களிடம் பெற்றுக் கொள்ளலாம். மேலும், மேற்குறிப்பிட்டுள்ள துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்தும் எளிதாக செயல்படுத்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதன்மைச் செயலர்/ஆணையர், மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழர்கள் நல ஆணையரகம், சென்னை–5 கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

12. மேற்கண்ட அமைச்சரவை கூட்டத்திலும் மற்றும் ஆளுநர் உரையின் அறிவிப்பிலும் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க மேலே பத்தி 10-ல் தெரிவிக்கப்பட்டுள்ள திட்டங்களை சம்பந்தப்பட்ட துறையால் செயல்படுத்திட இதன் மூலம் அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

குமார் ஜெயந்த்
அரசுச் செயலாளர்

பெறுநர்

கூடுதல் அரசு தலைமைச் செயலாளர், சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்ட துறை, சென்னை-9.
அரசுக் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை , சென்னை-9.
முதன்மை அரசுச் செயலாளர், உயர்கல்வித் துறை, சென்னை-9.
முதன்மைச் செயலர்/ஆணையர், மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழர்கள் நல ஆணையரகம், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்

<u>நகல்</u>

முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
பொது (மி.க.)த்துறை, சென்னை-9.
நிதி (பொது)த் துறை, சென்னை-9.
நிதி (நிதி நிலை-2) துறை, சென்னை-9.
பொது (ம.வா.1/ ம.வா3/சிறப்பு-ஆ) துறை, சென்னை9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்